**மே – 31**

# TNPSC துளிகள்

- இந்திய இரயில்வே நிர்வாகம் மற்றும் உத்தரப் பிரதேச மாநில அரசு ஆகியவை இணைந்து, கட்டார்னியாகாட் வனவிலங்கு சரணாலயத்திற்கும் துத்வா புலிகள் வளங் காப்பகத்திற்கும் இடையில் இந்தியாவின் முதல் சுற்றுலாப் பயணிகளுக்குப் பரந்த காட்சியினை வழங்கும் விஸ்டாடோம் ஜங்கிள் சஃபாரி இரயிலை அறிமுகப்படுத்தி உள்ளன.
- கூகுள் நிறுவனமானது, சமீபத்தில் அதன் அனைத்து தளங்கள் மற்றும் சேவைகளிலும் அடிப்படை செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை ஒருங்கிணைக்கும் "மத்ரியோஷ்கா" AI உத்தியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அல்ஜீரியா நாடானது, BRICS நாடுகளின் புதிய மேம்பாட்டு வங்கியின் (NDB) புதியதொரு உறுப்பினர் நாடாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டின் பெண்களின் ஆரோக்கியத்திற்காக என்று பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சர்வதேச தினம் ஆனது 2025 ஆம் ஆண்டு மே 28 ஆம் தேதியன்று கொண்டாடப் படுவதோடு, இது பெண்கள் மற்றும் சிறுமிகளின் ஆரோக்கியம் ஆனது குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் நாடுகளின் ஆரோக்கியத்திற்கு அடிப்படையானது என்பதை நினைவூட்டுகின்றது.
    - 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "In Solidarity We Resist: Our Fight, Our Right!" என்பதாகும்.
- 1953 ஆம் ஆண்டு நியூசிலாந்து நாட்டின் சர் எட்மண்ட் ஹிலாரி மற்றும் நேபாளத்தின் டென்சிங் நோர்கே ஷெர்பா ஆகியோர் முதன்முதலில் எவரெஸ்ட் சிகரத்தில் மிகவும் வெற்றிகரமாக ஏறியதை நன்கு நினைவு கூரும் வகையில் மே 29 ஆம் தேதி சர்வதேச எவரெஸ்ட் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- செரிமான ஆரோக்கியம் மற்றும் ஒட்டு மொத்த நல்வாழ்வில் அதன் தாக்கம் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலகச் செரிமான சுகாதார தினம் (WDHD) ஆண்டுதோறும் மே 29 அன்று அனுசரிக்கப்படுகிறது.
    - 2025 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Your Digestive Health: Nourish to Flourish" என்பது ஆகும்.

# தேசியச் செய்திகள்


## பஞ்சாயத்து முன்னேற்றக் குறியீடு (PAI) 2.0

- பஞ்சாயத்து முன்னேற்றக் குறியீடு (PAI) 2.0 என்ற ஒரு வலைதளமானது சமீபத்தில் தொடங்கப் பட்டது.
- 2023–24 ஆம் நிதியாண்டிற்கான உள்ளாட்சிக் குறிகாட்டிக்கான கட்டமைப்பு (LIF) என்ற கையிதழ் புத்தகமானது, சீர்தர இயக்கச் செயல்முறையுடன் (SOP) சேர்த்து வெளியிடப் பட்டது.
- PAI என்பது பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு பல பரிமாண மதிப்பீட்டுக் கட்டமைப்பாகும்.
- மிக நிலையான மேம்பாட்டு இலக்குகளின் உள்ளாட்சிமயமாக்கலுடன் தொடர்புடைய ஒன்பது கருப்பொருள்களில் 2.5 லட்சத்திற்கும் மேற்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளின் செயல்திறன் கண்காணிப்பைச் செயல்படுத்துவதை இது ஒரு நோக்கமாகக் கொண்டு

உள்ளது.




## பாரத் முன்னெச்சரிக்கை அமைப்பு





- புவி அறிவியல் துறை அமைச்சகத்தின் இந்திய வானிலை ஆய்வுத் துறையானது (IMD) பாரத் முன்னறிவிப்பு/ முன்னெச்சரிக்கை அமைப்பை (BFS) ஏற்றுள்ளது.
- இது 6 கிலோமீட்டர் வரையிலான தெளிவுத்திறன் கட்டமைப்பினைக் கொண்டிருக்கும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட வானிலை முன்னறிவிப்பு மாதிரியாகும்.
- இது 6 கிலோ மீட்டர் வரையில் மிக நுண்ணிய இடஞ்சார்ந்த தெளிவுத் திறனில் அதி-துல்லிய முன்னறிவிப்புகளை வழங்குகிறது.
- இது இந்தியாவினை ஐக்கியப் பேரரசு, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அதன் சக உலக நாடுகளை விட முன்னிலைப்படுத்துகிறது.
- அவற்றின் மாதிரிகள் மிகவும் பொதுவாக 9 முதல் 14 கிலோ மீட்டர் தெளிவுத்திறனில் இயங்குகின்றன.
- இந்த மேம்படுத்தப்பட்ட முன்னறிவிப்பு அமைப்பு ஆனது, உயர் செயல்திறன் கொண்ட

கணினி அமைப்புகளான 'அர்கா' மற்றும் 'அருணிகா' ஆகியவற்றின் பெரு ஆதரவுடன் செயல்படுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## வடக்கு வஃப்ரா வாரா-புர்கன் தளம்

- சவுதி அரேபியா மற்றும் குவைத் ஆகிய இரு நாடுகளும் கூட்டாக, இரு நாடுகளுக்கும் இடையிலான நடுநிலை மண்டலத்தின் ஒரு பகுதியான வடக்கு வஃப்ரா வாரா-புர்கன் தளத்தில் எண்ணெய் கண்டறிந்துள்ளதாக அறிவித்துள்ளன.
- இது 2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், பிரிவினை மண்டலத்திலும் அதன் அருகில் உள்ள ஒரு கடற்கரைப் பகுதியிலும் உற்பத்தி நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப் பட்டதிலிருந்து மேற்கொள்ளப்பட்ட முதல் கண்டுபிடிப்பைக் குறிக்கிறது.
- நடுநிலை மண்டலம் ஆனது பிரிக்கப் பட்ட மண்டலம் என்றும் அழைக்கப்படுகிறது.
- இது சவுதி அரேபியாவிற்கும் குவைத்துக்கும் இடையில் சுமார் 5,770 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் பரவியுள்ளது என்பதோடு அங்கு இரு நாடுகளும் எண்ணெய் உற்பத்தியில் சம உரிமைகளைப் பகிர்ந்து கொள்கின்றன.




## டேட்டன் அமைதி ஒப்பந்தங்கள்




- டேட்டன் அமைதி ஒப்பந்தங்களின் 30வது ஆண்டு விழா மிகச் சமீபத்தில் கொண்டாடப் பட்டது.

- டேட்டன் அமைதி ஒப்பந்தங்கள், 1995 ஆம் ஆண்டில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த போஸ்னியப் போரினை முடிவிற்குக் கொண்டு வந்தது.
- ஒரு பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தம் ஆனது போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவில் அமைதியை நிலை நாட்டியது.
- இந்த அதிகாரப்பூர்வ ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு 1995 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் தேதியன்று பாரீஸில் கையெழுத்தானது.

## கருங்காய்ச்சலுக்கு எதிரான போராட்டத்தில் ஒன்றுபடும் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகள்

- சாட், டிஜிபௌட்டி, எத்தியோப்பியா, சோமாலியா, தெற்கு சூடான் மற்றும் சூடான் ஆகியவை உள்ளுறுப்பு லீஷ்மேனியாசிஸ் (காலா-அசார் என்றும் அழைக்கப்படுகின்ற கருங்காய்ச்சல்) ஒழிப்பதற்காக என ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உள்ளன.
- ஒட்டுண்ணியால் ஏற்படும் கருங்காய்ச்சல், அதிக உயிரிழப்பு விகிதத்தைக் கொண்ட புறக்கணிக்கப்பட்ட வெப் பமண்டல நோய்களில் (NTD) ஒன்றாகும்.
- உலகளாவியப் பாதிப்பு எண்ணிக்கையில் 70 சதவீதத்திற்கும் அதிகமானவை கிழக்கு ஆப்பிரிக்கப் பிராந்தியத்தில் பதிவாகியுள்ளன என்பதோடு அங்கு பாதிக்கப் பட்ட மக்களில் பாதி பேர் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆவர்.
- 2025 ஆம் ஆண்டு மே மாத நிலவரப் படி, டோகோ (நான்கு NTD பாதிப்புகள்) மற்றும் பெனின், கானா மற்றும் இந்தியா (மூன்று NTD பாதிப்புகள்) உட்பட 56 நாடுகள் உலகளவில் குறைந்தது ஒரு NTD பாதிப்பினை அகற்றியுள்ளன.




## ஆறு புதிய தளங்கள் – GIAHS

- ஆறு புதிய தளங்கள் ஆனது சமீபத்தில் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் (FAO)

உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த வேளாண் பாரம்பரிய அமைப்புகள் (GIAHS) என அங்கீகரிக்கப்பட்டுள்ளது.


- பிரேசில் நாட்டில் உள்ள எர்வா-மேட் தாவரத்திற்கான ஒரு பாரம்பரிய வேளாண் வனவியல் அமைப்பு.
- சீனாவில் முத்துச் சிப்பி (ஒரு மெல்லுடலி), வெள்ளை தேயிலை மற்றும் பேரிக்காய் போன்றவற்றிற்கு மேற்கொள்ளப்படும் சிறப்பு வேளாண் செயல்முறைகள்,
- மெக்சிகோவில் முக்கிய உணவுப் பயிர்கள் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாக்கும் முந்தைய கால அமைப்பு மற்றும்
- ஸ்பெயின் நாட்டின் லான்சரோட் தீவின் எரிமலை நிலப்பரப்பில் மேற்கொள்ளப் படும் ஒரு தனித்துவமான வேளாண் முறை

❖ இது குடும்ப முறை வேளாண்மை மற்றும் பாரம்பரிய வேளாண் முறைகளை பருவ நிலை மாற்றம், சமூக இடப்பெயர்வுகள் மற்றும் பல்லுயிர் இழப்பு போன்ற முக்கிய அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இந்தியாவில் உள்ள 3 தளங்களுடன், சுமார் 28 நாடுகளில் மொத்தம் 95 GIAHS தளங்கள் உள்ளன.

❖ இந்தியாவில் உள்ள GIAHS தளங்கள்:

- காஷ்மீரின் குங்குமப்பூ வளர்ப்பு நகரம்
- கோராபுட் பாரம்பரிய வேளாண்மை - ஒடிசா
- கடல் மட்டத்திற்கு கீழே மேற்கொள்ளப்படும் வேளாண் முறை - கேரளா.





# பொருளாதாரச் செய்திகள்

## நிதி மோசடி ஆபத்து குறிகாட்டி (FRI)

❖ தொலைத்தொடர்புத் துறையானது 'நிதி மோசடி ஆபத்து என்ற குறிகாட்டியினை (FRI)' அறிமுகப் படுத்தியுள்ளது.

❖ இது இணையவெளிக் குற்ற மோசடி மற்றும் நிதி குற்றங்களைச் சமாளிப்பதற்காக வங்கிகள், UPI சேவை வழங்குநர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுடன் நன்கு மேம்பட்ட புலனாய்வுப் பகிர்வை செயல்படுத்துகிறது.

- இது ஒரு கைபேசி எண்ணை 'நடுத்தர', 'உயர்' அல்லது 'மிகவும் அதிக' நிதி மோசடி அபாயத்துடன் தொடர்புடையதாக வகைப்படுத்துகின்ற ஓர் இடர் அடிப்படையிலான அளவீடு ஆகும்.
- ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகமானது (UPI) மிகவும் அதிக FRI கொண்ட கைபேசி எண்களுடன் இணைக்கப்பட்ட பரிவர்த்தனைகளை நிராகரித்து, திரையில் எச்சரிக்கையை வழங்கும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நியாலியா டியாங்கோங்கென்சிஸ்





- புவியில் இதற்கு முன்பு தென்படாத இந்தப் பாக்டீரியமானது, சீனாவின் டியாங்கோங் விண்வெளி நிலையத்தில் கண்டறியப்பட்டுள்ளது.
- இதற்கு நியாலியா டியாங்கோங்கென்சிஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய இனம் ஆனது கோல் வடிவிலான, மண்ணில் வாழும் பாக்டீரியாவான நியாலியா சர்குலன்ஸ் எனப்படும் நன்கு அறியப்பட்ட திரிபுடன் நெருங்கிய மிகவும் தொடர்புடையதாகத் தெரிகிறது.

- இந்தப் புதிய இனம் ஆனது நைட்ரஜன் மற்றும் கார்பனின் மூலமாக ஜெலட்டினைச் சிதைக்கும் தனித்துவமான திறனைக் கொண்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## எரிசக்தி மற்றும் பருவநிலை மாற்ற அறிக்கை 2025

- 2005 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2030 ஆம் ஆண்டிற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உமிழ்வுத் தீவிரத்தினை 45 சதவீதம் குறைக்கும் பருவநிலை இலக்கை கடக்கும் பாதையில் இந்தியா உள்ளது.
- இந்த பகுப்பாய்வானது, டெல்லியில் உள்ள எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் நீர் ஆலோசனைக் குழு (CEEW) மற்றும் எரிசக்தி மீதான நன்கு செயல்திறன் கொண்ட பொருளாதாரத்திற்கான கூட்டணி (AEEE) ஆகியவற்றால் மேற்கொள்ளப் பட்டது.
- இந்தியாவின் எரிசக்தித் துறை உமிழ்வு தீவிரம் ஆனது 2005 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2030 ஆம் ஆண்டிற்குள் 48-57 சதவீதம் குறையக் கூடும்.





## மன்சலா ஏரி

- மன்சலா ஏரியானது வடக்கே மத்தியத் தரைக் கடலை ஒரு எல்லையாகக் கொண்டு எகிப்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது.
- 19 ஆம் நூற்றாண்டு வரை சுமார் 1,709 சதுர கிலோமீட்டராக இருந்த மன்சலா ஏரியின் பரப்பளவு 1907 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 67 சதவீதம் குறைந்து உள்ளது.
- மிகை ஊட்ட நிலை ஆனது மேலும் 45 சதவீதப் பரப்பளவு குறைப்புக்குப் பங்களித்தது என்பதோடு தற்போது, இந்த ஏரியானது சுமார் 572.41 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது.
- மன்சலா ஏரியில், அதன் பரப்பளவில் மொத்தம் 23 சதவீதத்தைக் கொண்டுள்ள சுமார்


304 தீவுகள் உள்ளன.

- இந்த ஏரிக்கு அருகில் உலகின் மிகப்பெரிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆனது 2021 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.
- புனரமைப்பு தூர்வாரல் நடவடிக்கையானது, 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் அதன் உப்புத் தன்மையை அதிகரித்து, ஏரியில் ஊட்டச் சத்துக்களைக் குறைத்தது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகின் 10 முன்னணி செல்வ வளம் மிக்க நகரங்கள் 2025





- நியூயார்க் நகரமானது சுமார் 384,500 மில்லியனர்கள், 818 சென்டி-மில்லியனர்கள் (100 மில்லியன் டாலருக்கும் அதிகமானச் சொத்துக்கள் கொண்ட தனிநபர்கள்) மற்றும் 66 பில்லியனர்களுடன் முதலிடத்தில் உள்ளது.
- அமெரிக்காவின் பே ஏரியா பகுதியானது (சான் பிரான்சிஸ்கோ மற்றும் சிலிகான் பள்ளத்தாக்கு உள்ளிட்டப் பகுதி) சுமார் 305,700 மில்லியனர்களுடன் 2வது இடத்தைப் பிடித்துள்ளது.

- 298,300 மில்லியனர்களைக் கொண்டு ஆசியாவின் பணக்கார நகரமாக உலகளவில் 3வது இடத்தில் டோக்கியோ உள்ளது.
- அதனைத் தொடர்ந்து சிங்கப்பூர், லாஸ் ஏஞ்சல்ஸ், இலண்டன், பாரீஸ், ஹாங்காங் மற்றும் சிட்னி போன்ற நகரங்கள் உள்ளன.
- இந்தியாவின் மும்பை நகரமானது 58,800 மில்லியனர்கள், 236 சென்டி-மில்லியனர்கள் மற்றும் 29 பில்லியனர்களுடன் 27வது இடத்தில் உள்ளது.
- டெல்லி 30,700 மில்லியனர்கள் மற்றும் 16 பில்லியனர்களுடன் 36வது இடத்தில் உள்ளது.

# மாநிலச் செய்திகள்

## சார்பு நிலை பிற்படுத்தப்பட்ட தன்மை குறியீட்டு முன்னெடுப்பு


- தெலுங்கானா அரசாங்கத்தின் நிபுணர் பணிக் குழுவானது அதன் முதல் வகையான 'சார்பு நிலை/வரலாற்று ரீதியான பிற்படுத்தப்பட்ட தன்மை குறியீட்டை' உருவாக்க முடிவு செய்துள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பில் பட்டியலிடப் பட்டுள்ள சுமார் 243 சாதி உட்பிரிவுகளுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வுகளை மதிப்பீடுவதற்கு என சாதி வாரிக் கணக்கெடுப்பு தரவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் இது மேற்கொள்ளப்படும்.
- 2024 ஆம் ஆண்டின் சமூக கல்வி வேலைவாய்ப்பு பொருளாதார அரசியல் சாதி (SEEEPC) வாரிக் கணக்கெடுப்பின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவை ஆய்வு செய்வதற்காகவும், பகுப்பாய்வு செய்வதற்காகவும், விளக்குவதற்காகவும் வேண்டி இந்தக் கணக்கெடுப்பு உருவாக்கப் பட்டது.
- இந்நிபுணர் குழுவானது, கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்கு இடையில் ஏழு பிரிவுகளின் கீழ் பிரிக்கப்பட்ட 43 அளவுருக்கள் வரை பயன்படுத்த உள்ளது.




## கேரள எண்ணெய் கசிவு நிகழ்வு 2025

- லைபீரியக் கொடியேந்திய MSC ELSA 3 என்ற சரக்குக் கப்பலானது, கேரள மாநிலக் கடற்கரையில் கவிழ்ந்தது.
- இது டீசல், உலை எண்ணெய் மற்றும் கால்சியம் கார்பைடு போன்ற ஆபத்தானப் பொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பலாகும்.

- விக்ரம், சாக்சம் மற்றும் சமர்த் ஆகிய மூன்று கடலோரக் காவல்படைக் கப்பல்கள், இப்பகுதியில் ஏற்பட்டுள்ள மாசுபாட்டைக் கட்டுபடுத்தும் பணியில் ஈடுபடுத்தப் பட்டு உள்ளன.
- கால்சியம் கார்பைடு ஆனது தண்ணீருடன் வினை புரியும் போது, அது அதிகளவில் வெப்பம் உமிழும் வினைக்கு உட்படுவதால், இது அசிட்டிலீன் வாயு மற்றும் கால்சியம் ஹைட்ராக்சைடை உருவாக்குகிறது.
- இந்த வினையின் போது வெளியிடப்படும் வெப்பம் குறைவாக இருந்தாலும், அதனை அடுத்து உருவாகும் அசிட்டிலீன் வாயு விரைவில் எரியக்கூடிய தன்மை உடையது.
- இதில் உற்பத்தி செய்யப்படும் கால்சியம் ஹைட்ராக்சைடு ஆனது அந்த நீரின் காரத் தன்மையை அதிகரித்து, நீரின் pH அளவை மாற்றுவதன் மூலம் நீர்வாழ் சுற்றுச்சூழல் அமைப்புகளைச் சீர்குலைக்கிறது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 'Ideas4LiFE' வெற்றியாளர்கள்





- 'Ideas4LiFE' முன்னெடுப்பின் கீழ் வெற்றி பெற்ற 21 கருத்தாக்கங்களைச் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC) அறிவித்துள்ளது.

- 'Ideas4LiFE' என்ற முன்னெடுப்பானது 'UNICEF YuWaah' உடன் இணைந்து ஒரு பிரத்தியேக வலைதளம் மூலம் 'Ideas4LiFE' முன்னெடுப்பு தொடங்கப்பட்டது.
- LiFE திட்டம் (ஆற்றலைச் சேமித்தல், தண்ணீரைச் சேமித்தல், நெகிழிப் பொருட்களின் ஒற்றைப் பயன்பாட்டினைத் தவிர்த்தல், மிக நிலையான உணவு முறைகளை ஏற்றல், கழிவுகளைக் குறைத்தல், மின்னணுக் கழிவுகளைக் குறைத்தல், நல் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை ஏற்றல்) ஆகியவற்றின் ஏழு கருப் பொருள்களில் ஏதேனும் ஒன்றில் கருத்தாக்கங்கள் வரவேற்கப்பட்டன.
- 'ஆற்றலைச் சேமித்தல்' என்ற ஒரு கருப்பொருளின் கீழ் காஞ்சிபுரத்தில் உள்ள பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மூன்றாவது பரிசை வென்றது.
- கோயம்புத்தூரில் உள்ள PSG கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது 'நெகிழிப் பொருட்களின் ஒற்றைப் பயன்பாட்டினைத் தவிர்த்தல்' என்ற ஒரு கருப்பொருளின் கீழ் முதல் பரிசையும், 'நிலையான உணவு முறைகளை ஏற்றல்' என்ற கருப்பொருளின் கீழ் 2வது பரிசையும் வென்றது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச மார்கோர் தினம் 2025 - மே 24

- காட்டாடு/மார்கோர் (காப்ரா ஃபால்கோனெரி) என்பது மத்திய மற்றும் தெற்கு ஆசியாவின் மலைப் பகுதிகளில் காணப்படுகின்ற ஒரு முக்கிய, சுற்றுச்சூழல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இனமாகும்.
- அவை ஆப்கானிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் முழுவதும் பரவி காணப்படுகின்றன.
- மார்கோர் ஆனது, 2014 ஆம் ஆண்டில் "அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனம்" ஆக வகைப்படுத்தப்பட்டது.
- உலகில் நன்கு வளர்ச்சியடைந்த காட்டாடுகளின் எண்ணிக்கையானது தோராயமாக 5,700 ஆகும்.
- இது பாகிஸ்தானின் தேசிய விலங்காகும்.





## உலக மனப்பித்து நோய் விழிப்புணர்வு தினம் 2025 - மே 24

- இந்தத் தினமானது மனப்பித்து நோய் அறிகுறிகளை அறிந்து கொள்வதையும், அவை

மனித வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் புரிந்து கொள்வதையும் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- மனப்பித்து நோய்/ஸ்கிசோஃப்ரினியா என்பது மிகவும் தவறான வகையில் புரிந்து கொள்ளப் பட்ட மனநலப் பாதிப்புகளில் ஒன்றாகும்.
- இதன் பொருள் தனி நபர்கள் நிஜ உலகில் இல்லாதவற்றைப் பார்க்கவும், கேட்கவும், அல்லது நம்பவும் கூடிய நிலையாகும்.
- உலகளவில் சுமார் 24 மில்லியன் மக்கள் அல்லது பொது மக்களில் 0.3% முதல் 0.7% வரை இந்த நிலையினால் பாதிக்கப்படுகின்றனர்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு "Rethink the Label: Reclaim the Story" என்பதாகும்.




## இந்தியாவில் காமன்வெல்த் தினம் 2025 - மே 24





- இந்தத் தினமானது, உலகளவில் பல்வேறு தேதிகளிலும், இந்தியாவில் மே 24 ஆம் தேதி அன்றும் அனுசரிக்கப்படுகிறது.

- இது பிரிட்டிஷ் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிய நாடுகளின் பகிரப்பட்ட வரலாறு மற்றும் மதிப்புகளை நினைவு கூர்கிறது.
- இந்தத் தினமானது 1819 ஆம் ஆண்டு மே 24 ஆம் தேதியன்று பிறந்த விக்டோரியா மகாராணியின் பிறந்தநாளுடன் ஒன்றி வருகிறது.
- கிருஷ்ண மேனனின் லண்டன் பிரகடனத்தின்படி இந்தியாவானது 1950 ஆம் ஆண்டில் காமன்வெல்த் உறுப்பினரானது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Together we thrive' என்பதாகும்.

## சுய-ஆட்சியை கொண்டிராத ஆட்சிப் பிரதேசங்களின் மக்களுடனான சர்வதேச ஒற்றுமைக்கான வாரம் 2025 - மே 25/31


- ஐக்கிய நாடுகள் சாசனத்தில், சுய-ஆட்சியைக் கொண்டிராத ஒரு பிரதேசம் என்பது "இன்னும் முழு அளவிலான சுய ஆட்சியை அடையாத மக்களை" கொண்ட ஒரு ஆட்சிப் பிரதேசமாக வரையறுக்கப் படுகிறது.
- 1946 ஆம் ஆண்டில், ஆஸ்திரேலியா, பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸ், நெதர்லாந்து, நியூசிலாந்து, ஐக்கியப் பேரரசு மற்றும் அமெரிக்கா எட்டு உறுப்பினர் நாடுகள், சுய ராஜ்ஜியமற்றவை என்று கருதிய சுமார் 72 பிரதேசங்களை தங்கள் நிர்வாகத்தின் கீழ் பட்டியலிட்டுள்ளன.
- இவற்றில் எட்டு பிரதேசங்கள் 1959 ஆம் ஆண்டிற்கு முன்பு சுதந்திரம் பெற்றன.
- 1960 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில், சுமார் 54 பிரதேசங்கள் சுய ஆட்சியைப் பெற்றன.
- தற்போது, 17 சுய ஆட்சி பெறாத பிரதேசங்கள் உள்ளன.




## உலக தைராய்டு தினம் 2025 - மே 25

- இது தைராய்டு சுரப்பியின் ஆரோக்கியம் குறித்த ஆரம்பகாலக் கண்டறிதலை நன்கு ஊக்குவிப்பதையும், அது குறித்த கல்வியை நன்கு ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தைராய்டு சுரப்பியானது சாதாரண வளர்ச்சி மற்றும் உடலியக்க ஆற்றல் வளர்சிதை மாற்றத்திற்கு அவசியமான தைராய்டு ஹார்மோன்களை உற்பத்தி செய்கிறது.

- உலகளவில் சுமார் 4.2 கோடிக்கும் அதிகமான இந்தியர்கள் தைராய்டு பாதிப்பினால் பாதிக்கப் பட்டுள்ளனர் மற்றும் சுமார் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் அயோடின் குறைபாடுள்ளப் பகுதிகளில் வாழ்கின்றனர்.




## உலக கால்பந்து தினம் 2025 - மே 25




- கடந்த ஆண்டில், ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபையானது இத்தினத்தினை அங்கீகரிப்பதற்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- 2024 ஆம் ஆண்டில், அனைத்துப் பிராந்தியங்களையும் சேர்ந்த கால்பந்து அணிகள் பங்கேற்ற முதல் சர்வதேசக் கால்பந்துப் போட்டியின் 100வது ஆண்டு நிறைவைக் குறித்தது.
- கால்பந்து விளையாட்டுப் போட்டியானது 1924 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டி என்பதில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## காணாமல் போன குழந்தைகளுக்கான சர்வதேச தினம் 2025 - மே 25


- காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடித்து, அவர்களது குடும்பங்களுடன் அவர்களை மீண்டும் ஒன்றிணைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை முன்னிலைப் படுத்துவதை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது கடத்தல் மற்றும் சுரண்டலில் இருந்து குழந்தைகளை நன்குப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளையும் ஊக்குவிப்பதோடு, மீட்கப்பட்டவர்களையும் கௌரவிக்கிறது.
- 1979 ஆம் ஆண்டு நியூயார்க் நகரில் பள்ளிக்குச் செல்லும் வழியில் காணாமல் போன ஆறு வயது சிறுவன் ஈடன் பாட்ஸ் என்பவர் காணாமல் போனதன் ஆண்டு நிறைவை அனுசரிக்கும் விதமாக இந்தத் தினம் கடைபிடிக்கப்படுகிறது.




## ஆப்பிரிக்க தினம் 2025 - மே 25

- இந்தத் தினமானது 1963 ஆம் ஆண்டு மே 25 ஆம் தேதியன்று ஆப்பிரிக்க ஒன்றிய அமைப்பு உருவாக்கப்பட்டதை நினைவு கூருகிறது.
- சுமார் 1.4 பில்லியன் மக்களைக் கொண்டுள்ள ஆப்பிரிக்கா உலக மக்கள் தொகையில் சுமார் 17% பங்கினை கொண்டுள்ளது.
- இந்தக் கண்டத்தில் உலகின் கனிம வளங்களில் சுமார் 30% மற்றும் உலகின் இது வரை பயன்படுத்தப்படாத விளைநிலங்களில் சுமார் 60% ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: 'Justice for Africans and People of African Descent through Reparations' என்பதாகும்.




## மாதவிடாய்க் காலச் சுகாதார தினம் 2025 - மே 28

- இது தூய்மையான மாதவிடாய்ச் சுகாதார மேலாண்மையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2013 ஆம் ஆண்டில் ஜெர்மனியில் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனமான வாஷ்

யுனைடெட் நிறுவனத்தால் தொடங்கப்பட்டது.

- ஆண்டின் ஐந்தாவது மாதமான மே மாதம் ஆனது, மாதவிடாய்ச் சுழற்சியின் சராசரி காலத்தை (ஐந்து நாட்கள்) குறிப்பதோடு, 28 என்பது மாதவிடாய்ச் சுழற்சியின் சராசரி நாட்களின் எண்ணிக்கையைக் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Together for a #PeriodFriendlyWorld" என்பதாகும்.




## உலக ஆவுளியா தினம் 2025 - மே 28




- துகோங்ஸ் (துகோங் துகோன்), "கடல் பசுக்கள்" என்றும் அழைக்கப்படுகின்றன.
- அவை கடல் புல் படுக்கைகளில் மேய்ந்து வாழும் கடல் வாழ் வகை பாலூட்டிகள் ஆகும் என்பதோடு இதன் காரணமாகவே அவை "கடலின் விவசாயிகள்" என்றப் புனைவுப் பெயரையும் பெறுகின்றன.
- அவை இந்தியப் பெருங்கடல் நீரில் காணப்படும் ஒரே தாவரம் உண்ணும் கடல் வாழ்

பாலூட்டிகள் ஆகும்.

- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- துகோங் வளங்காப்பகம் ஆனது, 2022 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் பாக் விரிகுடாவில் நிறுவப்பட்டது.

## உலகப் பட்டினி தினம் 2025 – மே 28




- இது பட்டினி நிலையின் பல மூலக் காரணங்களை எடுத்துக் காட்டுவதையும், எளிதில் பாதிக்கப்படக் கூடியச் சமூகங்களை மேம்படுத்தும் கொள்கைகள் மற்றும் அதன் நடைமுறைகளுக்கு ஆதரவளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினமானது, 2011 ஆம் ஆண்டில் பட்டினி நிலை தடுப்பு திட்டத்தால் (Hunger Project) தொடங்கப்பட்டது.
- 74 நாடுகளில் 343 மில்லியன் மக்கள் மிக கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர் கொண்டனர்.
- பருவநிலை மாற்றம் காரணமாக, குறிப்பாகக் குழந்தைகளுக்கு, பசி மற்றும் ஊட்டச் சத்து குறைபாடு 20% அதிகரித்துள்ளது.

## ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படை வீரர்களுக்கான சர்வதேச தினம் 2025 - மே 29

- ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படையானது, 1948 ஆம் ஆண்டில் மத்தியக் கிழக்கு நாடுகளில் ஐ.நா. அமைதி காப்பு நடவடிக்கையினை நிறுவிய போது இத்தினம் உருவானது.
- 119 நாடுகளைச் சேர்ந்த சுமார் 68,000 பணியாளர்கள் இராணுவம், காவல்துறை மற்றும் குடிமைப் பணியாளர்கள் தற்போது 11 அமைதி காப்பிற்கான பணிப் படைகளில் பணி ஆற்றுகின்றனர்.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "The Future of Peacekeeping" என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் அமைப்பின் நடவடிக்கைகளுக்குப் பணியாளர்களை அதிக அளவில் பங்களிக்கும் நாடுகளில் 5300 பணியாளர்களுடன் இந்தியா 4வது இடத்தில் உள்ளது.





## சர்வதேச உருளைக்கிழங்கு தினம் 2025 - மே 30




- உருளைக்கிழங்கில் உள்ள ஊட்டச்சத்து, பொருளாதாரப் பலன்மற்றும் அதன் பெரும் கலாச்சார முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் ஆகும்.
- உருளைக்கிழங்கு ஆனது, மற்றப் பயிர்களுடன் ஒப்பிடும் போது குறைந்த அளவிலான பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை ஏற்படுத்துகின்றதால், பருவநிலைக்கு உகந்த ஒரு பயிராகும்.
- பூச்சிகள், நோய்கள் மற்றும் பருவநிலை மாற்ற தாக்கங்களை எதிர்த்து மிகவும் நன்கு போராடுவதற்காக என மரபணு மாற்றப்பட்ட 5,000க்கும் மேற்பட்ட உருளைக்கிழங்கு வகைகள் நிலையான வேளாண் நடைமுறைகளுக்கு வழி வகுக்கின்றன.

- 2030 ஆம் ஆண்டில், உருளைக்கிழங்கின் மொத்த உற்பத்தி 112% அதிகரிப்புடன் 750 மில்லியன் டன்களை எட்டும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Shaping history, feeding the future' என்பது ஆகும்.

## கோவா மாநில அந்தஸ்து தினம் 2025 - மே 30





- கோவா மாநிலம் 1987 ஆம் ஆண்டு மே 30 ஆம் தேதியன்று மாநில அந்தஸ்தைப் பெற்று இந்தியாவின் 25 வது மாநிலமாக மாறியது.
- இது 1510 ஆம் ஆண்டில் பீஜப்பூரின் அடில் ஷா என்பவரை வீழ்த்தி, அல்போன்சோ டி அல்புகெர்க் என்பவர் கோவாவைக் கைப்பற்றியதிலிருந்து இது ஒரு போர்த்துகீசியப் பிரதேசமாக இருந்தது.
- பின்னர் 400 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்திய நாடானது போர்த்துகீசியர்களிடமிருந்து கோவாவை மீட்டெடுத்தது.
- போர்த்துகீசியர்களிடமிருந்து கோவாவை விடுவிப்பதற்காக என்று இந்திய ராணுவம் ஆனது 1961 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் "ஆபரேஷன் விஜய்" என்ற ஒரு ராணுவ நடவடிக்கையின் கீழ் கோவாவை ஆக்கிரமித்தது.
- கோவா இணைக்கப்படுவதற்கான நடவடிக்கையானது 1961 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் தேதியன்று இந்திய இராணுவத்தினால் தொடங்கப் பட்டது.

## இந்தி மொழிப் பத்திரிகை தினம் 2025 - மே 30

- இந்தத் தினம் ஆனது தோராயமாக இரண்டு நூற்றாண்டுகளாக இந்திய நாட்டில் செழித்து வளர்ந்த இந்தி மொழிப் பத்திரிகையின் நீடித்த மரபுக்கு கௌரவமளிக்கும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.
- 1826 ஆம் ஆண்டில் இந்த தினத்தில் தான், உதந்த் மார்தண்ட் (தி ரைசிங் சன்), என்ற முதல் இந்தி மொழி செய்தித்தாள் கல்கத்தாவில் (தற்போது கொல்கத்தா) வெளியிடப்

பட்டது.

❖ இது கான்பூரைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜுகல் கிஷோர் சுக்லாவால் தொடங்கப்பட்டது.




## உலகப் புகையிலை எதிர்ப்புத் தினம் 2025 - மே 31




❖ இது புகையிலைப் பயன்பாட்டின் ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதையும், அதன் நுகர்வைக் குறைப்பதற்கான பயனுள்ள கொள்கைகளை நன்கு ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ உலகளவில் 13 வயது முதல் 15 வயதுடைய சுமார் 37 மில்லியன் குழந்தைகள் இந்தப் புகையிலையைப் பயன்படுத்துவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

❖ 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Unmasking the Appeal: Exposing Industry Tactics on Tobacco and Nicotine Products" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## CEIR வலை தளத்தின் நிலை

❖ CEIR வலை தளமானது தொலைத்தொடர்புத் துறையினால் (DoT) உருவாக்கப்பட்டது.

- தொலைந்து போன அல்லது திருடப்பட்ட சாதனங்களை அவற்றின் IMEI எண்கள் மூலம் அவற்றின் தவறானப் பயன்பாட்டினைத் தடுப்பது, அதனைக் கண்காணிப்பது மற்றும் மேலாண்மை செய்வதன் மூலம் கைபேசித் திருட்டு மற்றும் இழப்பு நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- திருடப்பட்ட அல்லது தொலைந்து போன கைபேசிகளை மீட்டெடுக்கச் செய்வதில் தெலுங்கானா நாட்டிலேயே சிறந்த மாநிலமாக உருவெடுத்துள்ளது (78,114).

| Location | Mobiles Blocked | Mobiles Traced | Mobiles Recovered |
|---|---|---|---|
| Telangana | 3,41,670 | 1,90,832 | 79,428 |
| Karnataka | 3,83,413 | 2,06,835 | 79,036 |
| Maharashtra | 4,10,076 | 2,32,332 | 44,416 |
| Uttar Pradesh | 1,86,470 | 1,16,259 | 29,163 |
| Rajasthan | 99,530 | 66,018 | 26,806 |
| Tamil Nadu | 1,33,160 | 78,370 | 26,179 |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★